# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2418/42 - 2025 ජනවාරි මස 10 වැනි සිකුරාදා - 2024.01.10

2418/42 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச்சட்டம்**

**மதுவரி அறிவித்தல் இல. 01/2025**

**மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இந்த கட்டளையின் மூலம் 2025 சனவரி 11 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் பின்வருமாறு பணிக்கின்றேன்;

1. இலங்கையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் உரிமம் பெற்ற தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் விசேட சாராயம் தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா ஏழாயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு (ரூபா 7,244.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

2. இலங்கையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் உரிமம் பெற்ற தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் வெல்லப்பாகு (மொலாஸஸ்), பனை, தென்னை மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயங்கள் தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா ஏழாயிரத்து எழுநூற்று ஐம்பத்திரண்டு (ரூபா 7,752.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

3. இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட உள்நாட்டு தயாரிப்பாகிய "வெளிநாட்டு" ஸ்பிரித்துக்கள் தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது (ரூபா 7,969.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;


1A - PG 6993— 454 (2025/01)



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. இலங்கையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் உரிமம் பெற்ற வடிசாலையில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும், ஒட்டுத்துண்டில் (லேபிள்) குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுச்செறிவு ஐந்து சதவீதம் (5%) அல்லது அதற்குக் குறைவான மோல்ட் மதுபானம் தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா ஐயாயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து (ரூபா 5,735.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

5. இலங்கையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் உரிமம் பெற்ற வடிசாலையில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும், ஒட்டுத்துண்டில் (லேபிள்) குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுச்செறிவு ஐந்து சதவீதத்திற்கு (5%) அதிகமான மோல்ட் மதுபானம் தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா ஆறாயிரத்து பதினைந்து (ரூபா 6,015.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

6. பனை மரத்தின் அல்லது பிற தாவரங்களின் இயற்கைப் பொருட்களைக் காய்ச்சி வடிகட்டுவதைத் தவிர மற்ற செயல்முறைகளால் இலங்கையில் தயாரிக்கப்படும் மதுபானங்கள் (கள் அல்லது தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் ஏதேனும் மதுபானம் தவிர) தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா ஐயாயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து ரூபா (ரூபா 5,735.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

7. இலங்கையில் காய்ச்சி வடித்தல் அல்லாத பிற செயல்முறைகளால் தயாரிக்கப்படும் மதுசாரத்தின் அளவு பதினெட்டு சதவீதத்தினை (18%) விஞ்சாதுள்ள, உள்ளூர் தாவரப் பொருட்கள் அல்லது தாவர உற்பத்திப் பொருட்கள் அல்லது அருந்தக்கூடிய உள்ளூர் மிருகப் பால் ஆகியவற்றிலிருந்து மட்டுமே தயாரிக்கப்படும் மதுபானங்கள் தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா ஆயிரத்து ஐந்நூற்று அறுபத்தேழு ரூபாய் (ரூபா 1,567.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

8. இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட “மில்க் பஞ்ச்” மதுபானம் தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா மூவாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு (ரூபா 3,982.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

9. இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட, ஒட்டுத்துண்டில் (லேபிள்) குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுமையான செறிவு நான்கு சதவீதத்திற்கு (4%) மேற்படாத, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சைடர் மதுபானம் தொடர்பாக, மதுசாரம் லீட்டர் ஒன்றிற்கு ரூபா நான்காயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு ரூபா (ரூபா 4,347.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

10. மேலே (1) முதல் (9) வரை விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது, மேற்கூறப்பட்ட மதுபானத்தின் ஏற்றுமதி செய்யப்படும் எத்தகைய அளவு தொடர்பாகவும் அறவிடப்படவோ அல்லது மீளப் பெறப்படவோ கூடாது; மற்றும்

11. இலங்கையிலுள்ள ஏதேனும் இராஜதந்திர தூதரக சேவையின் பயன்பாட்டிற்காக அத்தகைய வடிசாலையிலிருந்து வழங்கப்பட்ட ஏதேனும் அளவிலான அத்தகைய மதுபானம் தொடர்பில், அத்தகைய அளவிலான மதுபானத்திற்கான கட்டணம், அத்தகைய இராஜதந்திர தூதரக சேவையின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டால், மேலே (4) மற்றும் (5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்வை விதிக்கப்படவோ அல்லது மீள்பெறப்படவோ கூடாது.

2023 திசெம்பர் 31 ஆந் திகதிய 2364/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மது வரி அறிவித்தல் இல. 04/2023 இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் .

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு - 01,
2025 சனவரி 10 ஆந் திகதி.

EOG 01-0110

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.